# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 10 கற்பனை 9] திருச்சி 15—9—67 [ தனிப் பிரதி 25 காசு


## திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்

# "நெஞ்சின் அலைகள்"

குடும்ப பாசத்துடன் பழகி வரும் திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் சென்ற 3—9—67-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு அபூர்வ சாதனையைச் செய்து காட்டினர். சங்க வளர்ச்சிக்கு ஒவ்வொருவருக்கும் பொறுப்புண்டு—சிறப்புண்டு என்பதை மெய்ப்பிக்க சிறந்த நாடகம் ஒன்றை நடத்தினர்—நடித்தனர்—பல வீடுகள் கடைகள் நாடி இலக்கிய ஆர்வலர்களின் நெஞ்சின் அலைகளோடு விளையாடிப் பார்த்ததின் பயனாக "நெஞ்சின் அலைகள்" என்ற நாடகத்தை திருச்சித் தேவர் மன்றத்தில் அகில இந்தியவானொலி நிலைய நிர்வாகி திரு. M.S.கோபால் M. A., அவர்கள் தலைமையில் சிறப்புற அரங்கேற்றினர்.

பிரபல நாவலாசிரியரும் சங்கத் துணைத் தலைவர்களில் ஒருவருமான திரு. அகிலன் அவர்களின் "நெஞ்சின் அலைகள்" என்ற நவீனத்தை சங்கப் பொதுச்செயலாளர் திரு. ரா. நீலமேகம் நாடகமாக அமைத்துச் சிறப்புற வசனம் எழுதியிருந்தார்.

நாடகத்தின் கதையை எடைகாண வேண்டாம். தமிழுக்குப் புகழ் சேர்க்கும் படைப்பென்று அறிஞர்கள் ஏற்கனவே எடை கண்டு சாகித்திய அகாடமி பரிசும் வழங்கி விட்டதால்.

நல்ல கதையை நல்ல நாடகமாக்குவதோ, திரைப்படமாக்குவதோ எல்லோராலும் முடியாது. காரணம், அது நல்ல "கதை"யாக இருப்பதால்! ஏன் அத்தகையக் கதைகளைப் பயன்படுத்துவதற்கு துணிவு பெற்றவர்களே மிகச் சிலர் தானே! எனவே "நெஞ்சின் அலைகள்" கதையை நாடகமாக்கிய ரா. நீலமேகம் அவர்களின் துணிவுக்கு முதலில் பாராட்டு தெரிவிக்க வேண்டும். மூலத்தின் சுவை கெடாமல் கருத்தாழத்துடன் உரையாடல் எழுதி விறுவிறுப்பு குன்றாமல் செய்தது இலக்கியப் பெருமைக்கு, திறமைக்குத் தனிப்பாராட்டுச் சொல்லலாம். கொண்ட கொள்கையில் அழுத்தமான பிடிப்புடன் அவர் செய்த சாதனை மறத்தற்கரியது.

பாடல்கள் ஒன்பது. கவிதை நயமும் இனிய இசை அமைப்பும் நவரசங்களுக்கு உவமையாக விளங்கியது. துணைச்செயலாளர் திருச்சி பாரதனும், கூட்டுச் செயலாளர் பட்டுக்கோட்டை குமாரவேலும் பாடல்களை அமைத்துத் தந்திருந்தனர். ஒரே பாடல் மூன்றுமுறை திரும்பத் திரும்பப் பாடப்பெற்றது ரசிகர்கள் உள்ளத்தை மிகவும் கவர்ந்து மகிழ்ச்சி வெள்ளத்திலும் சோக நிலையிலும் ஆழ்த்தியது.

"துணி வெளுக்க மண்ணுண்டு, தோல் வெளுக்கசாம்பலுண்டு, மணி வெளுக்கச் சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லையே!" என்று முத்துமாரியிடம் சித்தம் தடுமாறிப் புலம்பினனே, பாரதி—அந்த கவிக் குலத்தலைவனின் குரல், நடனத்தோடு ஒலிக்க நாடகம் தொடங்கியது—தொடக்கத்திலேயே பொலிவு பெற்றது. அதுவே நாடகத் துவக்க இறைவணக்கமாகவும் அமைத்திருந்தது ஓர் புதுமை.

பிழைத்தாலும் அன்றி மறைந்தாலும், தன் பெயருக்கும் புகழுக்கும் உழைத்திருக்கும் எழுத்தாளனின் சிறப்புகளை — "நெஞ்சின் அலையில் கொஞ்சிடும் நினைவில் நிகரில்லா மொழி முழங்கிடும்" அவன் துடிப்பை "வஞ்சம் சூது போர் வெறி மாய வல்லமை யாவும் சேர்க்கும்" எழுத்தாளன் ஆற்றலை அறிமுகப்படுத்தும் பாடலுடன் கலைஞர்கள் அறிமுகம் செய்யப்பட்டார்கள்.

நாடகக்காட்சிகள் விரிந்தன. காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பும் கலைமெருகும் கூடியது. ரசிகர்கள் உள்ளம் பரவசத்தில் ஆழ்ந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்டோர் குழுமி இருந்த சபையில் நிசப்தம் குடிகொண்டு சம்பவங்களை ரசிக்கும் ஒலிகள் மட்டும் அவ்வப்போது கிளம்பியது நாடகத்தின் தரத்திற்குச் சான்று பகர்வதாக இருந்தது.


7-ஆம் பக்கம் பார்க்க

# “இந்துமதி”

[கோவிந்தராஜ்]

★

மாலை நேரம். மேற்கே அரபிக் கடலில் சூரியன் மறைகின்றான். அதோ கிழக்கே வானத்தில் முழுமதி தோன்றும். ரமணீயமான காட்சி வங்கக்கடலின்றும், பாற்குடமொன்று வெளிப்பட்டதோ எனக்கண்டோர் வியக்கும் வண்ணம் சந்திரோதயம்தான் மனதிற்கு எத்துணை மகிழ்ச்சியைத் தருகிறது. அதோ அங்கே மணற் பரப்பில் சின்னஞ்சிறு குழந்தைகள் கள்ளங்கபடமில்லாமல் களிப்போடு துள்ளித் திரிந்து ஓடிவிளையாடும் காட்சி எத்துணை இன்பமூட்டுகிறது இதயத்திற்கு ஆ...ஆ...அதோ இந்து மகா சமுத்திரம் தன் வெண்ணிற அலைகளென்னும் அழகிய மலர்களால் பாரத அன்னையின் பொன்னிறப் பாதங்களுக்கு, அஞ்சலி செய்யும் அற்புதக் காட்சி.

ஆம், புதுமணத்தம்பதிகளான மணவாளனும், மனோன்மணியும் கன்யாகுமரிக் கோவிலில் குமரித்தாயை வணங்கிவிட்டு, ஆலயத்திற்கு எதிரே உள்ள எழில்மிகு கடற்கரையில் அமர்ந்து, அங்கே பல திசைகளில் உள்ள அழகிய காட்சிகளைக்கண்டு ரசித்த வண்ணமிருக்கின்றனர். அதோ அவர்களருகே ஒரு மூதாட்டியும் அவள் கணவனும் மனநிறைவுடன் அமர்ந்து அமைதியாக உரையாடிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் மனோன்மணிக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. ஒரே சமயத்தில் சூரியன் மறைவதையும் சந்திரன் உதிப்பதையும் காண்கிறோமே.... இது.. உடனே மணவாளன் “மனோன்மணி .... இதுதான் உலகம் .... ம் ... ஆமாம்...பிறப்பு, இறப்பு இவை ஒரு நியதியாக நடந்து கொண்டேயிருக்கும். அழுபவன் ஒருவன், அவன் அருகே, ஆனந்தக் கண்ணீர் வடிப்பவன் ஒருவன்.

ஆனால் இந்தத் தத்துவார்த்த விளக்கங்கள், எப்போதும் பிடிப்பதில்லை மனோன்மணிக்கு. “இதோ பாருங்கள். உங்கள் வேதாந்த விளக்கங்கள் போதும் கிடைத்த இந்த மாலை நேரப் பொழுதை, வீணாக்காமல் இயற்கை எழிலை கலாரசனையோடு கண்டு களிப்போம்” என்றாள் அவள். “நல்லது தேவியாரே, தாங்கள் கலை உள்ளம் கொண்டவர்கள், இலட்சியவாதி என்பதை நான் மறந்தே போனேன்.” மணவாளனின் இச்சொற்கள் மனோன்மணியின் செவிகளில் படவேயில்லை. காரணம் அவள் சிந்தை இந்திய நாட்டில் எங்கும் காணக் கிடைக்காத, இவ்வியற்கைத் தாயின், எழிலோவியக் காட்சியிலே லயித்திருக்கிறது. ஆனால் அவள் சிந்தனை...

“மனோன்மணி .... மனோன்மணி .... மனோ...” என்று மூன்று முறை மங்கை அழைத்து குரல் கொடுத்த பிறகுதான் மனோன்மணியின் சிந்தனைப் புரவி திடீரென்று நின்றது. தன்னினைவு பெற்றாள். “என்ன மங்கை? நீ வந்து வெகு நேரமாயிற்றா? நீ வந்ததை நான் கவனிக்கவில்லையடி” என்றாள் மனோன்மணி. “அதுதான் தெரிகிறதே. ஆமாம் நானும் இங்கு வந்த பத்து நிமிஷங்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அப்படி ஆகாயத்தில் என்ன இருக்கிறது. அப்படி வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாயே” என்று குறைபட்டுக்கொண்டாள் மங்கை. “நீ என் அருமைத் தோழி இல்லையா ...சரி ... போகட்டும் ...நான் வானத்தில் என்ன பார்த்துக் கொண்டிருந்தேன்? சொல்லேன் பார்ப்போம்.” என்றாள் மனோன்மணி. “நான் என், அன்றாடவாழ்க்கையைப் பார்ப்பதற்கே வழியில்லை. வானத்தைப் பார்ப்பதெதற்கோ? எல்லாம் என் கணவர் நல்லபடி சம்பாதித்து ஒழுங்காக குடும்பம் நடத்தட்டும். அப்புறம் ஆகாயத்தைப் பார்த்து ரசிக்கலாம்” என்று அங்கலாய்த்துக்கொண்டாள்.

“ம்...நீ அப்படித்தான் பேசுவாய். மங்கை, இதோ பார் இந்த பூலோகத்தில் பெண்ணாகப் பிறந்தவள் எதிலும் பூரணத்துவம் பேரெழில் இவற்றைத்தான் நாடவேண்டும். இதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள்.”

“மனோன்மணி நீ இப்படி நடைமுறைக்கொவ்வாத இலட்சியங்களைப் பற்றிப் பேசியே உன்னை வீணான துன்பங்களுக்காளாக்கிக்கொண்டாய். ஆமாம்...நீ என்ன அப்படி ஆகாயத்தில் பார்த்துக்கொண்டிருந்தாய்...” என்று மீண்டும் கேட்டாள் மங்கை.

“என்ன மங்கை...அதோ பார் அழகான பிறைநிலா. வானத்தில் பால் நிலாத் தோன்றப் போகிறது. விரைவில் மூன்றாம் பிறைக்காட்சி காணக் காண எனக்கு ஏற்படும் களிப்புக்கோர் எல்லையில்லை ... அந்த பிறைமதி, முழுமதியாகத் தோன்றியதன்று. ஆமாம். அன்று மாலை அவரும் நானும் கன்னியாகுமரிக் கடற்கரையிலே எதை எதையோ பேசிக்களித்திருந்தோம்... இன்று...இப்போது அந்த மதி குறைமதியாக விளங்குகிறது. என் வாழ்வும் குறைப்பட்டுத்தான் இருக்கிறது” என்று வருந்தினாள் மனோன்மணி.

“இப்போதும் நாம் பார்ப்பது மூன்றாம் பிறை. வளர்பிறை நிச்சயம் உன் வாழ்க்கையும் நிறைவு பெறும். மனந்தளராதே மனோ ...” என்று ஆறுதல் சொன்னாள் மங்கை.

யார் இந்த மனோன்மணி மங்கை? அப்படி என்ன அவர்களுக்கு நேர்ந்துவிட்டது? இப்படி மனமொடிந்தது போல் பேசிக்கொள்கிறார்களே, நாம் அறிய வேண்டாமா?

சிலம்பூரில் சீரும் சிறப்பும் மிக்க குடும்பமொன்று. அதன் தலைவர் தணிகாசலம். தன் முயற்சியால் வாழ்க்கையில் முன்னுக்கு வந்தவர். எனவே, ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு கலங்காதவர்.

வேளாண்மையிலும் வாணிகத்திலும் விற்பன்னர் என விருது பெற்றவர். சமூகத்தில் செல்வமும் செல்வாக்கும் பெற்ற அவர், தன் அருமைச் செல்வமென மனதில் மதித்துப் போற்றியவள்தான் அவரது ஒரே புதல்வி மனோன்மணி. அவரது மனமென்னும் கண்ணின் மணி போன்றவள் அவள்.

சிறு வயதிலேயே பெற்றதாயை இழந்தாள் மனோன்மணி. எனவே அவளது தாயாகவும் தந்தையாகவும் அமைந்து அரும்பாடுபட்டு வளர்த்தார் தணிகாசலம். மனோன்மணி பிறக்கும் போது, மிகச்சாமான்ய நிலையில்தான் இருந்தார் தணிகாசலம். தாரத்தை இழந்த அவர் பல இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் உட்பட்ட நிலையிலும் தன் ஒரே திருமகளாம் மனோன்மணியை எவ்விதக் குறையுமின்றி வளர்த்தார்.

இல்லை என்பது மனோன்மணிக்கு இல்லை. எனவே தன் விருப்பப்படியே வீட்டில் எதுவும் நடக்க வேண்டும் என பிடிவாதகுணம் வளரலாயிற்று அவளிடம். தன் ஒரே மகள் பண்புள்ளவளாக வளர வேண்டும், சிறந்த படிப்பெல்லாம் பெற வேண்டும் என்று அளவிலாத ஆவல்கொண்டார் அவர். அதன் விளைவாக மிகச் சிறந்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பயிலும் வாய்ப்பு கிட்டியது மனோன்மணிக்கு.

மனோன்மணி இயற்கையில் சிறந்த கலையுள்ளம் படைத்தவள். ஆடும் மயில், பாடுங்குயில், அழகுக்கிளி,

(9-ஆம் பக்கம் பார்க்க)




கனவு 10] பிலவங்க, புரட்டாசி 15-9-67 [கற்பனை 9

## எழுத்தாளர்
## பெரியார் ஈ. வெ. ரா. வுக்கு சிலை

தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. சென்ற அரை நூற்றாண்டாக, தமிழகத்தின், அரசியல், சமுதாய வாழ்வில் பெரியதொரு மாறுதலை உருவாக்கிய சிறப்பு, பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு உண்டு.

அவருடைய சமுதாயக் கொள்கைகள் புரட்சிகரமானவை. பலருக்குப் பிடிக்காது. என்றாலும், சமுதாயத்தில் புரையோடியிருந்த நாசத்தன்மையை நீக்கி சமுதாயம் மேம்பட வேண்டுமென்று அவர் உள்ளத்தில் கொண்டிருந்த நோக்கத்தை எவரும் சந்தேகப்படவில்லை.

இன்றைய வாழ்வில் செல்வர்கள் மட்டுமல்ல, சாதாரண குப்பனும், சுப்பனும் கூட தன் வருவாய் நிலைக்குமேல் செலவு செய்து பிறர் மதிக்க வாழ வேண்டுமென்ற ஒரு எண்ணம் தீயினைப்போல பரவி வருகிற நேரம். சிக்கனம் என்பது எங்கு கிடைக்கும் என்று தேடுகின்ற காலம். இந்த நேரத்தில் வாழ்க்கைக்கு ஒரு லட்சிய புருடராக பெரியார் ஈ. வெ. ரா. வாழ்ந்து காட்டி வருகிறார்.

பெரியார் கஞ்சத்தனம் உள்ளவர் என்று தூற்றுபவர் பலர் இருக்கலாம். பணத்தாசை பிடித்தவர் என்று பேசுபவர் இருக்கலாம். இவர்கள் பெரியார் சமுதாயத்திற்காக, இதுவரை பதிமூன்று லட்ச ரூபாய் தானமாக வழங்கியிருக்கிறார் என்பதை அறிந்தால் பேசுவார்களா? தன்னுடைய செலவைக் குறைத்து செல்வத்தைச் சேர்த்து சமுதாயத்தின் மேன்மைக்காக, வருங்கால சமுதாயம் சிறப்புடன் வாழ வேண்டும் என்ற பேராசையால் அள்ளிவழங்கும் வள்ளலாகவும் பெரியார் ஈ. வெ. ரா. இருக்கிறார்கள் என்பது அறிந்தால் மனம் மாறுவார்கள் என்று நம்பலாம்.

தந்தை பெரியார் அவர்களின் சேவையை மதித்துப் பாராட்டும் வகையில் திருச்சிராப்பள்ளியில் பெரியார் சிலை செய்து நல்லதொரு இடத்திலே நாட்டவேண்டும் என்று நகர மக்கள் குழு முடிவு செய்தார்கள். பொன்னால் சிலை செய்து நாட்ட ஆசையிருந்தது. அதற்கு என்ன செய்வது? ஏழைகள் வாழும் நாட்டிலே உலோகத்தால் சிலை செய்யத்தான் முடிந்தது. திருச்சிராப்பள்ளியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கும் இடத்தில் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் தலைசிறந்த தலைவர் திரு. காமராஜ் பெரியாரின் சிலையை 17—9—67-ந்தேதி திறந்து வைக்கிறார்கள். தவத்திரு அடிகளார் விழாவுக்குத் தலைமை தாங்குகிறார்கள். தமிழகத்தின் முதல் அமைச்சர் உயர்திரு. சி. என். அண்ணாதுரை அவர்களும், அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களும், தமிழக சட்டமன்றத் தலைவர் சி. பா. ஆதித்தன் அவர்களும் காலை விழாவில் கலந்து கொண்டு போற்றியுரை ஆற்றுகிறார்கள்.

தனது டேனா முனையால், சென்ற ஐம்பது வருட காலத்தில் தமிழர் சமுதாயத்தில் ஒரு புத்துணர்வூட்டிய பெருமகனுக்கு ஒரு எழுத்தாளனுக்குச் சிலை அமைப்பதிலே தமிழ் எழுத்தாளர் அனைவரும் பெருமகிழ்வு அடையலாம். சிலை அமைக்கும் குழுவின் பொருளாளராக இருந்து சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. சிலைக்காக அன்புடன் உதவிய பெருமக்கள், உற்சாகம் காட்டி உழைத்த நண்பர்கள், சிற்றெறும்பைப் போல உழைத்த செயலாளரும், பஞ்சாயத்து செய்தி ஆசிரியரும், தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினருமான திரு கோவிந்தராஜ் அவர்களுக்குத் தமிழகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

தமிழ் எழுத்தாளர், புரட்சி எழுத்தாளர், புதுமை எழுத்தாளர், சமுதாயக் காவலன் எழுத்தாளன் என்பதை தனது செய்கையால் காட்டி நிருபித்த தமிழ் எழுத்தாளர் பெரியார் ஈ. வெ. ரா. வின் சிலை திறப்பு விழாவுக்கு திருச்சிக்கு வந்து பெருமகிழ்விலே பங்கு கொள்ளுமாறு தமிழ் மக்களை பணிவன்புடன் அழைக்கிறேன். அத்துடன் சிலைக்காகவும், விழாவுக்காகவும் பொருளுதவி செய்த பெருமக்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

— *அ. வெ. ர. கிருஷ்ணசாமி.*

---

## எழுத்தாளர் மாநாடு

தமிழ் எழுத்தாளர் 12வது மாநாடு வருகிற அக்டோபர் 22 ஆம் தேதி திருச்சிராப்பள்ளியில் நடைபெற இருக்கிறது. மாநாட்டைச் சிறப்பிக்கும் எழுத்தாளன் சிறப்பு மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது. அன்பர்களுக்கு அன்பு நிறைந்த வேண்டுகோள் மலருக்குச் சொல்லோவியங்கள் உதவுமாறு தனித்தனியாக எழுதியிருக்கிறேன். கடிதம் கிடைத்தவர்களுக்கு மலர் பற்றி ஞாபகப்படுத்தவும் இது உதவும். கடிதம் வந்து சேராதவர்கள் இதனையே அழைப்பாக ஏற்று மலருக்கு சிறந்த கட்டுரைகளை வழங்குமாறு வேண்டுகிறேன்.

வருடத்திற்கு ஒரு முறைகூடி தமிழ் எழுத்தாளர்கள் கலந்து மகிழும் வாய்ப்பு சென்ற பதினொரு வருடங்களாக தடையேதும் இல்லாமல் நடைபெற்று வருகிறது. கலந்து பேசுவதும் கூடிக் கலைவதும், நமக்குச் சிறப்பு. தமிழ் வளர, நமது சிந்தனை ஓங்க, வருங்கால சமுதாயத்திற்கு நல்வாழ்வு காட்ட நமக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை சிந்தித்துப் பார்ப்பதற்கு மாநாடு உதவுகிறது. மாநாட்டுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறும், மலருக்குக் கட்டுரை கவிதை, சிறு கதை ஆகிய சொல்லோவியங்கள் வழங்கி பெருமைபடுத்துமாறும் நண்பர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

— *ஆசிரியர்.*

# எட்டையபுரத்தில் பாரதி விழா

[டி. எல். பஞ்சாபகேசன்]

இந்த இருபதாம் நூற்றாண்டின் தலைமுறையினருக்கும் அவர்களுடைய வழி வழிவரும் எதிர்கால சந்ததியினருக்கும், தந்தையாய், குருவாய், தலைவனாய் அனைத்துக்கும் மேம்பட்ட சிருஷ்டிகர்த்தாவாகவும், மூன்று காலங்களையும் உணர்ந்த முனி புங்கவனாகவும் மதிக்கத் தக்க மகா கவிஞன் பாரதி. அவன் பிறந்த எட்டையபுரத்தில் மண்டபம் ஒன்று எழுப்பி ஆண்டுதோறும் விழா எடுக்கின்றனர் பல ஆண்டுகளாக. இத்திங்கள் 11, 12-ஆம் நாட்களில் கவிஞன் விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அவ் விழாவினைக் காணும் வாய்ப்பு ஓர் நல்வாய்ப்பாக எனது வாழ்க்கையில் அமைந்தது என்று தெரிவித்தால் மிகையாகாது.

11, 12 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்ற விழாவானது பாரதி கண்ட கனவுக்கு ஓர் இலக்கியமாக நடைபெற்றுள்ளது என விழாவைக் கண்டு களித்தோர் உரையாடிக் கொண்டிருந்ததும் செவியில் ஒலிக்கத்தான் செய்தது. நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப் பொழுதும் சோராதிருத்தல் என்று பாடிப் போந்த மகா கவிஞன் பாரதியின் விழாவை சிறப்பாக நடத்த பாரதி மணிமண்டப பராமரிப்புக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர் இவ்வாண்டில். கோவில் திருவிழாவினைக் கண்டு களிக்க பல கிராம மக்கள் தங்கள் தங்கள் குடும்பத்துடன் ...ன்று கண்டு களித்து குதூகலமாக இருப்பதைப் போன்று கவிஞனின் விழாவினைக்காண வந்த மக்கள் பல ஆயிரத்துக்கு மேற்பட்டிருக்கும். வந்ததோடு மட்டுமல்ல, எவ்வித இரைச்சலுமின்றி மோன நிலையோடு விழாவைக் கண்டுகளித்தார்கள் என்பதை இங்குக் குறிப்பிடத்தான்வேண்டும்.

11-ஆம் நாள் விழாவினை இருபகுதிகளாக அமைத்திருந்தனர். மாலை 4மணி அளவில் திரு. சோ. அழகர்சாமி, எம். எல். ஏ. அவர்கள் தேசீயக் கொடியை உயரப் பறக்கவிட்டு அஞ்சலி செலுத்தி இறை வணக்கத்துடன் விழா இனிது துவங்கியது. விழா துவக்கத்திற்கு முன், கோவில்பட்டி திரு. இராமையா பிள்ளை குழுவினரின் நாதஸ்வர இசை அனைவரையும் அகம் மகிழ்வித்தது. விழாக் குழுத்தலைவர் திரு. வி. எஸ். எஸ். வேலு முதலியார் அவர்கள், முற்பகுதியின் விழாவிற்கு தலைமை ஏற்கும்படி, அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத் தலைவர், பேராசிரியர் அ. சீனிவாச ராகவன், எம். ஏ. அவர்களின் பெயரை முன்மொழிய, செயலாளர் திரு. கு. துரைராஜ், எம். ஏ. அவர்கள் வழிமொழிய, சபையினரின் ஆரவாரத்தோடு, அ. சீ. ரா. அவர்கள் தலைமை தாங்க முன்வந்தார்கள். செயலாளர் கு. துரைராஜ் அவர்கள் முற் பகுதி விழாவிற்கு தலைமை ஏற்கும் தலைவருக்கும், துவக்க உரையாளருக்கும், சிறப்புச் சொற்பொழிவாற்ற வந்திருக்கும் பேரன்பர்களுக்கும் நல்வரவு கூறி விழாவின் சிறப்பைப்பற்றி ரத்தினச் சுருக்கமாகப் பேசி அமர்ந்தார்.

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியின் நிர்வாகியும் தன்னலமறியா சிறந்த தேசபக்தருமான திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் தமது விழாத் துவக்க உரையில் கூறியதாவது: பாரதி தான் வாழ்ந்த நாளில் இந்நாட்டின், அவல நிலையை நினைத்து நெஞ்சில் உரமுமின்றி-நேர்மைத் திறமுமின்றி என்று பாடிப் போந்ததற்கு ஏற்றவாறு, நாடு விடுதலையடைந்து இருபது ஆண்டுகளாகியும் நம்மில் ஒற்றுமையின்றி ஐம்பது கோடி மக்களும் ஒன்றுபட்டு வாழ முயலாமல் ஆளுக்கொரு கட்சியென அமைத்துக்கொண்டு பிரிவினையை வளர்த்துக் கொண்டுதான் நாம் வாழ்ந்து வருகின்றோம். அதையும் அவன் தனது தீர்க்க தரிசனத்தால் உணர்ந்துதான், "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற பாட்டையும் பாடிப் போந்தானோ என்று கருத வேண்டியிருக்கிறது. அவரவர் செய்த தீவினையின் பயனைப் போக்க திருக்கோவில்களுக்குச் சென்று மன்னிப்புக் கோருவதும், திருந்த முயற்சிப்பதும் எப்படி வழக்கமாக சமூகத்தில் ஒத்துக்கொண்டிருக்கின்றோமோ, அதைப் போன்று, தனக்கென வாழாமல், பிறருக்காக வாழ்ந்து பொன்னான கருத்துக்களையும், எதிர்கால பாரதம் எவ்வாறு அமையவேண்டும் என்ற தனது தாபத்தை நமக்குத் தெரிவித்துள்ளான் கவிஞன். அதை நாம் உணர்ந்து, உலகுக்குத் தலைமையாக வாழ்கின்ற நெறியைக்காண தேசீயத் திருப்பதியாக உள்ள எட்டையபுரத்தில் இன்று நடைபெறும் கவிஞனின் விழாவில் அனைவரும் சபதம் ஏற்க வேண்டும் என்றும், அதற்கு இன்றைய விழா வழி காட்டியாக அமைய வேண்டும் என்ற தனது தேசீயத் தாபத்தை மிகவும் அழகாகவும், கருத்து நிறைந்ததாகவும் அனைவரையும் சிந்திக்கும்படியாகவும் செய்துவிட்டது என்று தெரிவித்தால் மிகையாகாது.

விழாத் தலைவர் திரு. அ. சீ. ரா. அவர்கள் தனது தலைமையுரையில் முன் பகுதியாக தெரிவித்தக் கருத்துக்களாவன :

பாரதியும் ஓர் கவிஞனா? எதற்காக ஆண்டு தோறும் விழா எடுக்கின்றார்கள்? விழா எடுக்கும் அளவுக்கு என்ன சாதித்திருக்கிறார்? என்ற கேள்விகளை எழுப்பும் அன்பர்களுக்கு பதில் உரைப்பதே இன்றைய விழாவின் தலைமைப் பேச்சாக நான்கொண்டிருக்கின்றேன். தனக்கு முன்னால் வாழ்ந்த கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்ற பல மேதைகளின் இலக்கியக் காப்பியங்களையும், நெறிகளையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்து, அடிமைப்பட்டிருக்கும் இந்நாட்டின் நிலையை உணர்ந்தான் பாரதி. இந்நாடு விடுதலை பெற வேண்டும், மக்கள் மக்களாக வாழ வேண்டும் என்று சிந்தித்தான்.

கவிஞன் பாரதி நினைத்ததைப் போன்று எந்தக் கவிஞனும் எதிர்காலத்தைப்பற்றி நினைக்கவில்லை. அவன் பல நூல்களையும், வேதம், உபநிடதம் போன்ற பல சாத்திரங்களையும் கற்றுணர்ந்தான். கவிஞன் என்ற இலக்கணத்துக்கு ஆதாரமாக வாழ்ந்து காட்டினான். பாரதி பாடிய 'அக்னிக்குஞ்சு' என்ற பாடலைப்பாடி அதன் உட்பொருளை உணர்ந்தால் பாரதிக்கு விழா என்றென்றும் தேவை என்பதை அறிவீர்கள். அக்னியில் குஞ்சென்றும், மூப்பென்றும் வித்தியாசம் எப்படி கிடையாதோ அதைப் போல் அவன் சொற்கள் அனைத்தும், அறியாமை, ஆணவம், பொய்மை, அடிமை போன்ற பல தடைகளை நம்மிடமிருந்து சுட்டெரித்து நம்மை தலை நிமிர்ந்து நிற்கும்படி செய்திருக்கிறது. அவன் சொற்கள் வலிமை படைத்திருப்பதால்தான் அவன் கண்ட கனவுகளனைத்தும் இன்று நம்மிடை பலித்து வருவதைக் காண்கின்றோம். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் காலத்திற்கேற்ற புதுமைகளையும், நமக்குத் தேவையான ஒளியையும் அவன் கவிதைகளின் மூலம் காணமுடியும். அதனால்தான் பாரதியின் விழா நடைபெறவேண்டும் என்று அழுத்தமாக எடுத்துரைத்தார்.

சிறப்புச் சொற்பொழிவாற்ற வந்த மதுரை பொறியியல் கல்லூரி மாணவர் திரு. இராசகோபால் அவர்கள் பாரதியின் பேரில் இருக்கும் தனது பாசத்தை வெளிக்காட்ட, பாரதியைக் கவிஞன் என்றழைப்பதைவிட அதற்கு மேற்பட்ட சொல் ஏதாவது இருந்தால் அதைக் கொண்டு அழைக்கலாம். எழுத்தாளன், தேசீயவாதி, தத்துவஞானி என்றழைக்கலாம். எழுத்தாளனாகவும், தேசீயவாதியாகவும் இருந்தவர்கள் இந்நாட்டை யாருந் திறமை பெற்று உலகம் மதிக்கத்தக்க அளவுக்கு இந்நாட்டை உருவாக்கியுள்ளார்கள். அதைப் போன்றவர் பாரதி. என்ற அடை மொழிச் சொற்களால் புகழ்ந்து பேசியமர்ந்தார்.

தலைவர் அ. சீ. ரா. அவர்கள் இராசகோபால் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலுரைக்கவும், கவிஞனா? என்ற சந்தேகத்தை தீர்த்து வைக்கவும் எழுந்து பேசியதாவது:

எல்லாத் துறையிலும் வல்லமை பெற்று, எல்லையற்ற எல்லா உள்ளங்களின் உணர்வுகளை அறிந்து, அனைவருடைய குரலாக நின்று சொல்லில் வடித்துத் தருபவன்தான் கவிஞன். அந்த விதமாக பாரதி வாழ்ந்து காட்டியிருக்கிறான். 'ஆசாரிய இதயம்' என்ற வைணவ நூலில், கவிஞன் யார் என்பதைப் பற்றி கூறுவதாவது: தன்னை அடக்குபவன் — பிறரையும் அடங்கும்படி செய்பவன். மூன்று காலங்களையும் உணர்ந்தவன் — ரிஷி, முனிவன், தத்துவஞானி. இதைவிட வேறு சொல் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு ஆதாரமாக பாரதி வாழ்ந்து போந்ததினால் நாம் கவிஞன் என்று சிறப்பாக அழைக்கின்றோம். "கவிஞன்" என்ற சொல்லைவிட வேறு சிறப்புப் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. கவிஞன் என்ற மாத்திரத்திலே அவன் மிகவும் மேலோனாக மதிக்கப்பட வேண்டியவனாகி விடுகின்றான் என்று விழாத் தலைவர் பேசியதும், திரு என். எஸ். வி. சித்தன், எம். எல். ஏ. அவர்கள் "சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற தலைப்பில் கடல் மடை திறந்தாற்போல கருத்தாழத்தோடும், சுவையோடும் பேசியதாவது: செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே— எங்கள் தந்தையர் நாடு என்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற இரண்டு அடிகளை மட்டும் வைத்துக் கொண்டு, தாய்க்கு தியாக உள்ளமும், தந்தைக்கு கடுமையும்—கடமையும் கொண்ட உள்ளமும் உண்டு என்பதை அழகாகச் சித்தரித்து, நாடு உயர, அவன் கனவு கண்ட சமுதாயம் உருவாக மக்கள் சக்தி பெற ஒரு மூச்சாக மனதில் திடம் கொண்டு ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும் என்று பேசியமர்ந்தார்.

மேடைப் பேச்சு வல்லுனரான புலவர் கீரன் அவர்கள் "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்." என்ற தலைப்பில் தனக்கே உரிய பாணியில் நின்று முழக்கம் செய்து சபையை ஆரவாரத்தில் ஆழ்த்தினார். அவர் கூறிய கருத்துக்களாவன:

பாரதி கம்பனைப் போல, வில்லியைப் போல வெறும் கற்பனைக் கவிதைகளைப் படைக்கவில்லை. ஆயினும் அதை அவன் இகழாமல் வில்லியின் கற்பனையில் உதயமான பாரதக் கதையில் வரும் கதாபாத்திரமான திரௌபதியை பாரதத்தாயாக வைத்தும், பஞ்சபாண்டவர்களை தேசீயத் தலைவர்களாகவும் கற்பனை செய்து, அடிமைப்பட்டிருந்த பாரதத்தை விடுவிக்க "பாஞ்சாலி சபதம்" என்ற கற்பனைக் காவியத்தை உருவாக்கியிருக்கிறான். வில்லியின் பாடல்கள் பலவற்றையும், பாரதியின் பாஞ்சாலி சபதப் பாடல்களையும் ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு, வில்லியைவிட பாரதி எப்படி உயர்ந்திருக்கின்றான் என்பதை மேற்கோள் காட்டி, துரியோதனனை — நம்மை அடிமைப் படுத்தி ஆண்டு வந்த வெள்ளையனுக்கு ஒப்பிட்டு, அனைவரும் மயிர்க் கூச்சலிடும்படி பேசினார். ஔவை பிராட்டியார் எழுதிச் சென்ற ஆத்திச் சூடியும்—பாரதியின் ஆத்திச் சூடியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் காணப்பட்டாலும், நாட்டின் இன்றைய நிலைமையில் பாரத மக்களுக்கு பயன்படும் வகையில் பாரதி அதை உருவாக்கியிருக்கிறான். பாஞ்சாலி சபதத்தில் 'தருமம் மறுபடியும் வெல்லும்' என்ற பாரதியின் வாக்கின்படி நாட்டிற்கு இன்றைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மனதில் வைத்துக்கொண்டு, நமக்குத் தென்பு வரக்கூடிய அளவுக்கு அவன் சொற்கள் வலிமை மிக்கதாகக் காட்டுகின்றது என்றும். பாரதியின் பாஞ்சாலி சபதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து பிறநாட்டினரும் அதைப் படித்துப் பயன்பெற தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதைப பணிவோடும், அன்போடும் தெரிவித்து, உணர்ச்சி ததும்ப பேசியமர்ந்தார்.

தலைவர் தலைமையுரையின் இறுதியில் அனைவருடைய சிறப்புச் சொற்பொழிவையும் பாராட்டி, வில்லியின் பாரதம் ஓர் கற்பனைக் கவிதையாகக் கொண்டாலும், அதில் வரும் பாத்திரப் படைப்பின் வீரத்தையும், தர்மத்தையும் ஆதாரமாகக் கொண்டு இன்றைய நமது நாட்டின் சூழ்நிலைக்கேற்ப பாரதி பாடிப் போந்தான். அதனால்தான் நாடு உயர பாரதியின் சொற்கள் வலிமை பெற்றதாகப் புலப்படுகின்றது. அதனால் நமது தேசீயக் கவிஞன், பாராட்டப்படும் உலக மகா கவிகள் பலரில் சிறந்தவராகக் காணப்படுகின்றார். கவிஞன் சொல் ஒரு நாளும் பொய்க்காது என்பது முற்றும் உண்மை என்பதை நாம் கண்டு களிக்கின்றோம் என்று தனது கருத்துக்களை முத்துத் தெளித்தாற்போல அழகாக எடுத்துரைத்தார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றச் செயலாளர் திரு. ரெட்டியார் அவர்கள் பாரதியின் வரலாற்று தொகுப்பு ஒன்றை பல ஆயிரம் ரூபாய் செலவில் கடந்த நான்கு ஆண்டுகளாகச் சேகரித்து வருகின்றார். அந்தத் தொகுப்பின் 'மாதிரிப பகுதி அட்டைகள்' சிலவற்றையும், மகாகவி பாரதி 82-வது ஜெயந்தி விழாவின் போது வெளியிடப்பட்ட பாரதியின் புகைபபடங்கள், புதுப்புனல் வெளியீடுகளில் சிலவற்றை பாரதி மணிமண்டப பராமரிப்புக் குழுவினரிடம் தலைவர் திரு. அ.சீ.ரா. அவர்கள் மூலம் ஒப்படைக்கும் பொருப்பை "எழுத்தாளன்" துணை ஆசிரியர் திரு. டி. எல். பஞ்சாபகேசன் ஏற்று வழங்கினார். அகனை தலைவர் அன்புடன் ஏற்று, விழாவில் பங்குகொள்ள வந்திருந்த புலவர் பெருமக்களுக்கும், அறிஞர்களுக்கும் பாரதியின் புகைப் படங்களை வழங்கியும், ஏனைய புத்தகங்களையும், பாரதி வரலாற்றுத் தொகுப்பு அட்டைகளையும், பாரதியின் முழு உருவப் புகைப் படம் ஒன்றையும் மண்டபத்தில் வைக்குமாறு செயலாளரிடம் வழங்கினார். விழாச் செயலாளர் முற்பகுதி விழாவிற்கு நன்றி புகல, இனிது நிறைவுபெற்றது.

இராமவதாரத்தின் மகிமையை தெலுங்கில் சாகித்தியம் இயற்றி தெலுங்கு மொழிக்கு புகழ் தேடி வைத்த தியாகய்யர்வாள் மறைந்த நாளன்று திருவையாற்றில் சங்கீத வித்துவான்கள் ஆண்டுக்கொருமுறை ஒருங்குகூடி தங்கள் அஞ்சலிகளைச் செலுத்துவது போன்று, இவ்வாண்டு எட்டையபுரம் பாரதி விழா அமைந்தது என்றால் மிகையாகாது. முதற் பகுதி நிகழ்ச்சியில் சொற்பொழிவுகளும், பிற்பகுதியில் கவியரங்கமும் நடைபெற ஏற்பாடுகள் இருந்தன. விழாக்குழு செயலாளர் திரு. சித்தரஞ்சன் கவியரங்குத் தலைவருக்கும்—கவிஞர்களுக்கும் வரவேற்புக் கூறியமர்ந்த பின், திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைச் சார்ந்த திரு. கோபால் இறை வணக்கத்துடன் கவியரங்கம் துவங்கியது.

கவியரங்குத் தலைவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், தனது ஞானசாரியனுகவும். குருவாகவும் விளங்கும் பாரதிக்கு பாமாலை ஒன்று புனைந்து அஞ்சலித் தெரிவித்துத் தனது தலைமையுரையினை கவிதையிலேயே வடித்துக் கொடுத்தது சபையில் வீற்றிருந்த அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தது.

மண்டபம் கட்டி பல விழாக்கள் கண்ட எட்டையபுர மக்களுக்கு இவ்வாண்டில் தான் கவியரங்கம் என்ருல் எதுவென்று அறியும் முதல் வாய்ப்பாக அமைந்திருந்தது. எட்டையபுர பாரதி மண்டப விழாவின் முதல் கவியரங்கம் இவ்வாண்டில்தான் நடைபெற்றிருக்கிறது என்று அனைவரும் தெரிவித்தனர்.

உடல் நலம் குன்றியிருந்த அயிலைத் தமிழ்ச் செழியன் "பாரதி கண்ட பாரதம்" என்ற தலைப்பில் கவிதையைப் புனைந்து மேடையேறினுர். எட்டையபுரம் மண்ணிலே வந்து தனது கவிதையை அரங்கேற்ற வேண்டும் என்ற தாபத்தால் ஓர் கவிதையை மட்டும் பாடிக்காண்பித்தபின் ஏனைய கவிதைகளை திரு. கோபாலன் அவர்கள் உணர்ச்சி ததும்ப பாடி முடித்து அயிலைத் தமிழச் செழியனுக்கு புகழ் தேடித் தந்தமர்ந்தார். "பாரதி கண்ட தெய்வம்" என்ற தலைப்பில் பழனி இளங்கம்பன் இசையோடும், "பாரதி கண்ட தமிழ்" என்ற தலைப்பில் ஈரோடு தமிழன்பன் அவர்களும் "பாரதி கண்ட காதல்" என்ற தலைப்பில் சேலம் முருகு சுந்தரம் அவர்களும், "பாரதி கண்ட புரட்சி" என்ற தலைப்பில் தூத்துக்குடி ஜெகதீசன் அவர்களும் பாமாலை சூட்டி கவிஞனுக்கு அஞ்சலி செலுத்தி அனைவருடைய ஆதரவையும் ஆசியையும் பெற்றனர். தலைவர் திரு. ரெட்டியார் அவர்கள் கவிஞர் ஒவ்வொருவரையும் அவ்வப்போது அறிமுகம் செய்த பாணியும், அவர்களின் கவிதை நயத்தையும் அழகுபட எடுத்தியம்பியதும், இறுதியாக பாரதிக்கு பல்லாண்டு கூறி கவியரங்கத்தின் இறுதியுரையை இனிது முடித்தார்கள். செயலாளர் சித்தரஞ்சன் நன்றி புகல கவியரங்க விழா இனிது நிறைவு பெற்றது.

வழக்கமாக நடைபெற்று வந்த இசை விழாவையும் நடத்த இவ்வாண்டில் ஏற்பாடு செய்திருந்தனர் விழாக் குழுவினர். திருக்கோவிலூர் திருமதி அலமேலு புஷ்பா குழுவினரின் இன்னிசையுடன் முதல் நாள் நிகழ்ச்சி இனிது நிறைவு பெற்றது.

12 ஆம் நாள் மாலை 5-30 மணிக்கு இறை வணக்கத்துடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி துவங்கியது. பாரதி கவிதையில் விஞ்சியிருப்பது நாட்டுப் பற்ரு? மொழிப்பற்ரு? என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று நிகழ்ந்தது. பட்டி மன்ற நடுவர் பொறுப்பை, திரு. நா. பாலுசாமி எம்.ஏ., எம்.லிட். அவர்கள் சிறப்பாக செய்து முடித்தார்கள். நாட்டுப் பற்றே—என்ற கட்சியின் தலைவராக குமரி அனந்தன், எம், ஏ. அவர்களும் அதைத் தொடர்ந்து, திருவாளர்கள் கு. பரமசிவம், எம். ஏ., இரா. மீனுட்சி, எம். ஏ., சாலமன் பாப்பையா, எம். ஏ. ஆகியோரும், மொழிப்பற்றே—என்ற கட்சியின் தலைமைப் பொறுப்பை திரு. பா. வளவன் அரசு எம். ஏ. அவர்களும் அதைச் சார்ந்து எஸ். சரோஜா, சி. கனகசபாபதி எம். ஏ. வேலாயுதம் ஆகியோரும் தங்கள் தங்கள் கட்சியை மிகவும் அழகாக எடுத்துரைத்து வாதாடியதும் நடுவரின் தீர்ப்பும் சபையில் அமர்ந்திருந்தோருக்கு உற்சாகமும் தென்பும் தரும் அளவுக்கு இருந்தது. செயலாளர் நன்றி புகல, இரவு 9-30 மணிக்கு ஸ்ரீரங்கம் ஆர். சரோஜா சகோதரிகள் இசையரங்குடன் இவ்வாண்டு விழா இனிது நிறைவு பெற்றது.

நெல்லை மாவட்டத்தின் புகழ் என்றும் நின்று நிலவ கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. அவர்களும் மகாகவி பாரதியும் வந்து பிறந்தார்கள். அவர்கள் பிறந்ததால் தமிழர்கள் உணர்வு பெற்று நாட்டின் விடுதலையில் ஓயாது உழைக்க முன் வந்தார்கள். அவர்கள் அடிச்சுவட்டைப்பற்றி தமிழ் மொழிக்கு உலக அரங்கில் சிறப்புத் தேடித்தரும் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தலைவர் திரு. அ. சீ. ரா. அவர்களும், ஏ. பி. சி. வீரபாகு அவர்களும் இரட்டையர்களாக இவ்வாண்டு விழாவில் கலந்து கொண்டு மேடையில் அமர்ந்திருந்தது, வ. உ. சியும் - பாரதியும் வந்தமர்ந்தது போன்று காட்சியளித்தது என்று தெரிவிப்பது மிகையாகாது. தமிழ் மொழி- இனம் நாடு மேலும் பல சிறப்புகள் அடையும் என்ற நம்பிக்கை அனைவர் எண்ணங்களிலும் உதயமாயிற்று என்றும்கூட அறிவிக்கலாம்.

திருச்சி வானொலி நிலைய அதிபர் திரு. எம். எஸ். கோபால் அவர்கள் பாரதி விழா நிகழ்ச்சி இரண்டு நாட்களிலும் தானே நேரிடை வந்திருந்து, நிகழ்ச்சி முழுவதையும் பாரத நாட்டு மக்கள் செவிக்கு இன்பம் பயக்குவிக்கும் முறையில் ஒலிப்பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்திருந்ததும் பாராட்டக் கூடியதே.

செயலாளர் கு. துரைராஜ், சித்தரஞ்சன், விழா ஏற்பாட்டில் காட்டிய ஆர்வமும், கி. முத்துராமகிருஷ்ணன் அவர்கள் விருந்தினரை வரவேற்று இன்முகம் காட்டி உபசரித்ததும் விழாவின் வெற்றிக்கு ஓர் சிறப்பாகவே இருந்தது என்றுதான் தெரிவிக்க வேண்டும்.

வாழ்க பாரதி நாமம்! வளர்க அவன் புகழ்!

——

# மண்ணும் மனிதனும்

[கன்னட மொழிப் புதினம்— ஆசிரியர் : சிவராமகாரத் — தமிழாக்கம் : சித்தலிங்கையா—வெளியீடு ; சாகித்யஅக்காதெமி பக்கம் : **686** — விலை ரு. 12-50]

இப் புதினம் கருநாடகத்தில் மேலைக் கடற்கரையை யொட்டி அமைந்த ஒரு சிற்றூரில் வாழ்ந்து புரோகிதத் தொழிலையும் வேளாண்மையையும் ஒருங்கே செய்து வந்த ஓர் எளிய அந்தணர் குடியினரின் மூன்று தலைமுறையினரைப் பற்றிய படப்பிடிப்பாகும்

இராம ஐதாளர் என்னும் புரோகிதருக்கு பல ஆண்டுகளாக குழந்தைப் பேறு இல்லாமையால் மறுமணம் புரிந்துகொள்ளுகிருர். ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண்குழந்தையும் பிறக்கின்றன. ஐதாளர் தன் மகனை ஆங்கிலம் படிக்கச் செய்து பெரும் வழக்கறிஞனுக்கி பெருஞ் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழச் செய்ய வேண்டும் என்று கனவு காணுகிருர். மகனும் ஆங்கிலம் படிக்கிருன். ஆனுல் தீய நண்பர்களின் சேர்க்கையால் ஒழுக்கம் கெட்டுப் பிஞ்சிலே பழுக்கிருன் தன் மகனைப்பற்றிய உயர் கனவு காணும் தந்தை ஒரு பெரிய வழக்கறிஞரின் மகளை மகனுக்கு மணம் முடித்து வைக்கிருர். மாமனுரும் இவனது படிப்பின் செலவை ஏற்கிருர் இவனது தீயொழுக்கத்தால் ஈட்டிய நோய் இவனது மனைவிக்கும் பரவி அதனுல் கருச்சிதைவு ஏற்படுகிறது. இதையறிந்த தந்தை பெரிதும் மனம் வருந்துகிருர்; மகனையும் கண்டிக்கிருர். ஆனுல் மகன் திருந்தியபாடும் இல்லை. இக் கவலையிலேயே ஐதாளர் இயற்கை எய்துகிருர்.

மகன் இலச்சன், இப்போது தன் மனைவியின் பெயரில் தன் தந்தை எழுதிவைத்திருந்த சொத்துக்களையும் ஏய்த்துத் தன் பெயருக்கு எழுதிக் கொள்ளுகிருன். கருவுற்ற தன் மனைவியை விட்டுப் பிரிந்து சென்று அச் சொத்து முழுவதையும் செலவழிக்கிருன். இவனின் மனைவி நாகவேணி இரு மாமியாரோடும் இணைந்து தன் மகனை வளர்ப்பதற்காக வறுமையிலேயும் மகிழ்வாக வாழ்கிருள். அம்மகனும் நன்கு வளர்ந்து கல்வி கற்று வருகிருன். இவன் உயர்கல்வி கற்பதற்காக சென்னைக்கு வருகிருன். இவன் பி. ஏ. இறுதி ஆண்டு படிக்கும்போது காந்தியடிகளின் உப்புக் காய்ச்சும் அறப்போரில் பங்குகொண்டு சில மாதங்கள் சிறை செல்லுகிருன். பின்னர் அடுத்த ஆண்டு பட்டம் பெறுகிருன்.

வேலை தேடும் படலம் தொடர்கிறது. ஒரு உணவு விடுதியில் சிறிது காலம் பணிபுரிகிறன். அப்போது தன்

7-ஆம் பக்கம் பார்க்க

**6-ஆம் பக்கத் தொடர்ச்சி**

தந்தையை மிக மோசமான நிலையில் பார்த்து மேலும் வெறுப்படைகிறான். நல்ல வேலை தேடி பம்பாய் செல்லுகிறான். அங்கே ஒரு யூதப் பெண்ணிடத்து ஓவியம் பயில்கிறான். தன் சொந்த ஊருக்கே திரும்பி பாட்டனாரைப் போன்றே வேளாண்மைப் பணியில் ஈடுபடுகிறான். அவ்வூர் ஆசிரியனாயும் பணிபுரிகிறான். தனக்கொத்த ஓர் எளிய குடும்பத்தில் மணம் கொண்டு வாழ்கிறான். இதுதான் கதைச் சுருக்கம்.

ஆசிரியர் மூன்று தலைமுறைகள் பற்றிய இக்கதையை மிக அழகாகக் கூறிச் செல்லுகிறார். இதைப் படிக்கும் போது நாம் அச்சூழ்நிலைக்கே சென்று விடுகிறோம். ஊரின் எளிய நிலையையும் ஊரருகே கடல் அலைகள் ஆரவாரிப்பதையும் ஆசிரியர் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார். கோதண்டராம ஐதாளர் "எங்கள் மகன் கலியாணத்திற்கு தேவர்களே வாத்தியம் வாசித்தார்கள்" என்று கூறுவதும், ஏழைப்புரோகிதர் தன் மகளுக்கு எல்லோருக்கும் நிறைய வேலையிருக்கும் மழைக்காலத்தில் அதிகம்பேர் வரசகூடாது என்பதற்காகவே திருமணத்திறகு நாள் வைப்பதும். ஐதாளர் மாமனார் வீட்டிற்கு போகும் போது குடையில் எல்லாம் காற்றில் போக காம்பு மட்டும்எஞ்சியிருப்பதும், ஐதாளர் விறகுக்கட்டை என்று ஆற்றிலிருந்து செத்த எருமையைக் கரை ஏற்றுவதும், பார்வதி பசுவிடமும், கன்றிடமும் பேசுவதும், மீனவர்கள், கள் குடிப்பதில்லை என்று சத்தியம் கூறிப் பின்னர் அதுபற்றிக் கவலையின்றிக் குடிப்பதும் இன்னும் இதுபோன்று பல நிகழ்ச்சிகளும்ஆசிரியரின்ஆழ்ந்த உலகியலறிவைக் காட்டுவனவாகும்.

ஆசிரியர் பாத்திரப் படைப்பிலும் நன்கு வெற்றி பெற்றிருக்கின்றார். சரசுவதி, பார்வதி இருவரையும் உழைப்பின் உருவங்களாகவும் கள்ளங்கபடமற்றவர்களாகவும் காட்டியுள்ளார். அதுபோன்றே சத்தியபாமாவையும் நாகவேணியையும் துன்பநிலையிலும் மனங்கலங்காதவர்களாகக் காட்டியுள்ளார். இராம ஐதாளர் மிக நல்ல படப்பிடிப்பு. சீமைய்யர் ஓட்டுவீடு கட்டியவுடன் தானும் போட்டியிட எண்ணுவதும் பிறவும் நன்கு உள்ளன. சீமைய்யர் திருமணத்தில் மிகவிரைவாகப் பரிமாறச்செய்து நிலைமையை சமாளிப்பது சுவையாய் இருக்கிறது. இலச்சன், இளைஞர்கள் எப்படிச் சிலர் கெட்டுப் போகிறார்கள் என்பதற்கான படப்பிடிப்பு. மூன்றும் தலைமுறையான இராமன்தான் ஆசிரியரின் கொள்கைகளைக் காட்டும் பாத்திரம் என்று ஒருவாறு கருதலாம். காந்தியாரின் அறப்போரில் இவன் பங்கு கொள்ளுவதும் பொது உடமைக் கொள்கைகளில் ஓரளவே பற்றுகொள்வதும் காண்கிறோம். எனினும் இவன் எக்கொள்கையிலும் ஒரு பிடிப்பு இன்றி இருப்பதுஅவ்வளவுசிறப்பளிப்பதாய்த் தோன்றவில்லை.

புதினம் சிறப்பாகவே உள்ளது. மொழிப்பெயர்ப்பு நன்கு உள்ளது. ஒரு தமிழ்ப் புதினத்தைப் படிப்பதைப் போன்றே உணர்கிறோம். இந்நூல் கருநாடக மக்கள் வாழ்க்கையின் நல்லதொரு படப்பிடிப்பாக விளங்குகிறது.

---

## நெஞ்சின் அலைகள்

**முதல் பக்கத் தொடர்ச்சி**

கதைத்தலைவன் வாசுவின்பாத்திரத்தை நடன ஆசிரியர் P. M. பாபு ஏற்றிருந்தார். மிகச்சிரமமான அப்பாத்திரத்தைமிகவும் அனாயாசமாக நடித்தார் திரு. பாபு. நடனப் பயிற்சியுடன், நடிப்புத்திறனும் சேர்ந்து பளிச்சிட்டுஅவர்பாகத்தை சிறப்புற வைத்துப் பாராட்டுப் பெற்றார்.

ஆரம்பக்காட்சியில் "எங்கள் முத்துமாரி" நடனத்தையும், கதையில் இரண்டு நடனங்களையும் திரு. P. M. பாபுவே அமைத்து அதில் தானும் ஆடி நல்ல பெயர் பெற்றார். நடனங்கள் பிரமாதம்.

வாசுவின் தம்பி சங்கரன் பாகத்தை திரு. A. C. ஜவஹர் ஏற்றிருந்தார். துடிப்பும் மிடுக்கும் உள்ள அப்பாகத்தைச் சிறப்புறச் செய்திருந்தார். அண்ணன் வாசு பட்டாளத்தில் சேர்ந்துவிட்டான் என்று அறிந்தவுடன் அவர் துடித்த துடிப்பும், அண்ணன் ஆத்திரத்துடன் அறைந்துவிடவும் அண்ணன் அடித்த நோக்கம் புரிந்து அவர் மனம் மாறியதும், வாசு தன் தவறை உணர்ந்து வருந்தியதும் பார்ப்போர் நெஞ்சங்களை உலுக்கி விட்டது. A. C. ஜவஹர் நடிப்பும், P M. பாபுவின் நடிப்பும் சிறப்புற விளங்கியது.

இருவருக்கும் தாயாகவே விளங்கினார் சுப்பம்மாள் பாத்திரமேற்று நடித்த திரு. P. கோபாலன். இயற்கையைப் பிரதிபலிக்கும் நடிப்பு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. பெண்வேடம் தாங்கிய பல பெண்கள் நடுவில் ஒரு ஆண் பெண்வேடம் தாங்கிநடித்துசபாஷ் பெறுவதென்றால் அதற்கு தனித் திறமைவேண்டும். திரு. P. கோபாலன் அதில் சிறந்து விளங்கினார். அவ்வைதிரு. தி.க. சண்முகத்திற்கு வாரிசுஎன்று கூறத்தக்க வகையில் இருந்தது அவர் நடிப்பு.

தர்மலிங்கமாக வந்த திரு.T.S.M. சுந்தரம் ஓர் சுருட்டுக் கம்பெனி முதலாளியாகவே காட்சிஅளித்தார். அதற்குள்ள மிடுக்கும், செருக்கும் நிறைந்திருந்தது அவர் நடிப்பில். தன் அருமை மகள் கனகத்திடம் அவர் கொண்டுள்ள பாசத்தை உணர்த்தியபோதும், தன் இளையாள் தம்பி பசுபதியின் சூழ்ச்சியை புரிந்து அவனை விரட்டியடித்த போதும் நடிப்பின் சிகரமாக இருந்தது. தங்கையிடம் சீறி பாய்ந்துவிட்டு, மனைவி கொடுக்கும்காபியை வேகமாக வாங்கிக் குடித்தபின் சாய்வு நாற்காலியில்நீட்டி நிமிர்ந்து அவர் படுதத அழகுஇருக்கிறதே...?

தர்மலிங்கத்தின் கணக்கப்பிள்ளையாக திரு. K. R. சண்முகம்தோன்றினார். அவர் உடை, நடை, உருவ அமைப்பு, முடிந்து விட்ட குடுமி அனைத்தும் கணக்காக கணக்கப்பிள்ளையாகவே தோற்றமளித்தது. அதேபோல் நடிப்பிலும், பேச்சிலும் கணக்காக இருந்தார். மன்றத்தில் அவர் தோற்றம் ஓர் கலகலப்பை ஊட்டியது. கணக்கின் சிறப்பை விளக்கி அவர் பாடி கணக்காக நடனமாடியதுகனகச்சிதமாக இருந்தது. நல்ல பாத்திரம். நல்ல நடிப்பு.

'வில்லன்' என்றால் "ஹா...ஹ... ஹா" என்று பேய்க்கூச்சல் போட வேண்டும் என்று வகுத்தவர்கள் நெஞ்சின் அலைகளில் அகிலன் படைத்த இரண்டு வில்லன்களைப் பார்க்கவேண்டும். கதாசிரியர் கற்பனையில் உதித்த இருவில்லன்கள் பாத்திரத்தையும் ஏற்ற இருவரும் அப்படியே ஆசிரியர் கற்பனையைப் பிரதிபலித்தார்கள்.

முற்பகுதியில் வரும் வில்லன் பசுபதியாகத் தோன்றிய ஆர். சி. சேகர் சிறப்புற நடித்தார். அவைசியமாக ஆடாமல் வார்த்தைகளில் மிடுக்கையும், குழைவையும் கூட்டி வில்லனது உணர்ச்சிகளைக் கர்சிதமாகப் பிரதிபலித்தார்.

இரண்டாவது வில்லன் ராகவன் பாத்திரமேற்றிருந்தவர் இலக்கிய மேடைகளில் நன்கு அறிமுகமான திரு. சோ.சத்தியசீலன் M. A., B. T. இலக்கியப் பட்டி மன்றங்களில் தனது கட்சிக்காக வாதாடும் சத்தியசீலன் இதில் தன் மனசாட்சியுடன் போராடிய ஒவ்வொரு கட்டத்திலும் மெய்சிலிர்க்க வைத்தார்.

யவர் பேச்சில் அழகுத் தமிழ் விளை யாடியது. பாவமும், நயமும் பந்தயம் போட்டன.

"சுடுங்கள் புஷ்பா, உங்கள் கையால் சுடப்பட்டு சாவதை வர வேற்கிறேன்.

'இந்திரன் கெட்டதும்
பெண்ணாலே
சந்திரன் கெட்டதும்
பெண்ணாலே
ராவணன் கெட்டதும்
பெண்ணாலே—இந்த
ராகவன் கெட்டதும்
பெண்ணாலே

என்று இருக்கட்டுமே" என்று அவர் வசனம் உதிர்த்து தன் உள்ளக் கிடக்கையை உருவகித்த போது சபையே குலுங்கியது. எழுந்த கரவொலி அடங்க இரண்டு விநாடியாயிற்று. சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல நல்ல நடிகர் என்பதை நிரூபித்துவிட்டார் திரு. சோ. சத்தியசீலன் இந்நாடகத்தில்.

புஷ்பாவின் அண்ணன் லோக நாதனாக திரு. துரை நமசிவாயம் B.A., B.T., பாத்திரமேற்றிருந்தார். அவர் தோற்றமும் பேச்சும் நன்கு அமைந் திருந்தது. தன் தங்கையை வாசு வுடன் பாரத மண்ணிற்குச் சென்று அங்கு குழந்தைபெற்று அக்குழந்தை என்னை மாமா என்று அழைப்பதாக எண்ணி மகிழ்வேன் என்று கூறி பிரியாவிடை கொடுத்த காட்சி கண்களைக் கலக்கின.

ராணுவ முகாமில் நடித்த ஒவ் வொருவரும் சோடை போகவில்லை. இட்லிக்காக ராணுவத்தில் சேர்ந்து அங்கு கிடைக்கும் பூரி, சப்பாத்தி யால் மனம் நொந்து, இட்லிக்காக ஏங்கி "இட்டிலியைப் பிட்டு சாம் பாரில் தொட்டு..." என்று பரிதாப மாக நீட்டி முழக்கிய திரு. A. F. ஜெகந்நாதன் நல்ல பாராட்டைப் பெற்றார். உணர்ச்சி மிகுந்த இளைஞன் ராஜுவாக திரு. K.A.P.V. கதிரேசன் அனுயாசமாக நடித்தார். பலதேசப் பெண்களைக்காணப் பட் டாளத்தில் சேர்ந்த ரெங்கசாமியாக திரு. R. மகாலிங்கமும் தன் தங்கை யின் திருமணத்திற்குப் பணம் சேர்க்க ராணுவத்தில் சேர்ந்த பொறுப்பு மிகுந்த இளைஞன் சிவா வாக திரு. V. K. மூர்த்தியும் திறம் பட நடித்தார்கள்.

வாசுவிடம் பாடம் பயிலும் மாண வன் சிறுவனாக மாஸ்டர் குமரன் வந்தான். அக்குழந்தையின் மழலை மொழியும் கச்சிதமான நடிப்பும் சபையில் ஓர் கலகலப்பையூட்டி யது.

கதைத்தலைவி கனகம் வேடத் தில் டி. என். ஜெயகுமாரி வந்தார். குரலில் குழைவு இருந்தது. நடிப்பில் மெருகு பளிச்சிட்டது.

புஷ்பா பாகம் ஏற்ற P. ஜீவஜோதி மேடையில் அதிகம் பழக்கமில்லாத புதியவராக இருந்தாலும் அனுபவம் பெற்றவர் போல அழகாகநடித்தார். உணர்ச்சியான பல கட்டங்களில் அவர் நடிப்பு சிறந்து விளங்கியது. புஷ்பா, மாசற்ற, குழந்தை உள்ளம் கொண்ட ஓர் பெண்ணாக அகிலன் உருவாக்கியுள்ள பாத்திரமாகவே ஜீவஜோதி உலவினார். பர்மாதமிழ்ப் பெண்போல் முழுமை பெறாத சொற்களால் உச்சரித்தது தனி அழகூட்டியது.

இறுதியாக புஷ்பா இந்தியாவிற்கு வந்து கனகத்தைக்கண்டு அவளி டம் வாசுவை ஒப்படைத்துவிட்டு, தனக்காக அவர்களைப்பாடச் சொல் லிக் கேட்டுக்கொண்டே உயிர்நீத்த காட்சி ரசிகர்களின் மனதைஉலுக்கி விட்டது. ஜெயகுமாரி, ஜீவஜோதி, பாபு மூவரும் உச்சகட்டத்தில் இருந் தார்கள். அதற்கிடையே அக்காட்சி யில் பாடப்பட்ட பாட்டின் இசை கல் நெஞ்சையும் கலக்குவதாக இருந்தது.

நாடகத்திற்கு இசை அமைக்கும் பொறுப்பை ஏற்றிருந்த திரு. ஸ்டேனிஸ் மிகத்திறம்பட தன் பணியை நிறைவேற்றியிருந்தார். இனிய இசை, நல்ல மெட்டுகள். சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான இசை. அற்புதமாக இருந்தது.

பின்னிசை பாடிய திரு. R. பொன்னுசாமியும், பத்மினியும் நன்றாகப் பாடினார்கள். பாடல்கள் சுத்தமாக புரியும்படியும், பாவத்து டனும் பாடினார்கள்.

நாடகத்தை மிகவும் சிறக்கச் செய்தது கண்கவரும் காட்சி அமைப்புகள். தொழில் துறையினர் செய்வதுபோல இருந்தது ஒவ் வொரு காட்சியும். காட்சி அமைத்த திரு. பாஸ்கர் குழுவினர் பாராட்டுக் குரியவர்.

வண்ண விளக்குகள் கண்ணைக் கவர்ந்தன. காட்சிகளுக்குக் கவர்ச்சி யூட்டின. பேபி வாய்ஸ் அமைப் புக்கு பாராட்டுகள்.

மேடை நிர்வாகப் பொறுப்பு சிரமமானது. அப்பொறுப்பை ஏற்றி ருந்த திரு. N. மீனாக்ஷிசுந்தரம் B. COM., G. ஜம்புநாதன், B. A. இருவ ரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரு விநாடி கூட தாமதமில் லாமல் காட்சிகள் விறு, விறு என்று செல்லும்படி செய்து ஓர் சாதனையை ஏற்படுத்திவிட்டார்கள். இருவருக் கும் துணையாக நின்றவர்கள் D. S. ராமன்குட்டி நாயர், B. ராமச்சந்தி ரன், பார்த்தசாரதி, E. H. சீனிவாச ராவ். நல்ல ஒத்துழைப்பு.

ஒப்பனையும் நன்றாகவே இருந் தது.

இத்துணை சிறப்புடன் நெஞ்சின் அலைகளைத் தயாரித்து, பயிற்சி அளித்து அரங்கேற்றியவர் திரு. ரா. நீலமேகம். சிறந்து விளங்கு கிறார் இந்நாடகமூலம்.

சங்கத்தின் தலைவராக மட்டு மின்றி இந்நாடக நிர்வாகத்தை ஏற்றுஎழுத்தாளர்கள்சிறந்தநாடகக் காரர்களும்கூட என்ற பெருமை யைத் திருச்சியில் நிலைநாட்டிய பெருமை திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர் களைச்சாரும்.

நாடக ஆரம்பத்தில் திரு. A. S. ராகவன் அனைவரையும் வரவேற் றார்.

இடையில் தோழமை மன்றத்தார் தாங்களே மகிழ்ந்து முன் வந்து தலைவர், நாடக ஆசிரியர், பாடல் ஆசிரியர்கள் அனைவருக்கும் கதர்த் துண்டு அணிவித்துப் பாராட்டினர்.

நாடகத்தைப் பற்றிய விமர்சன உரையை திரு. M. S. நாடார், M.A., திரு. C. S. கமலபதி, M.A., திரு. M. V. கிருஷ்ணமூர்த்திராவ், B.A., B.L. திரு. ரெட்டியார் முதலானோர் வழங் கினார்கள்.

தலைமையேற்ற திரு. M. S. கோபால் அவர்கள் நாடகத்தை வெகுவாகப் பாராட்டினார்.

துணைச்செயலாளர் திருச்சி பாரதன் நன்றி கூறினார்.

இத்தகைய பெருமையை நிலை நாட்டிய திருச்சித் தமிழ் எழுத் தாளர் சங்கத்தினரை பாராட்ட வேண்டும்.

## 2-ஆம் பக்கத் தொடர்ச்சி

———

வானத்து வெண்முகில், வானளாவும் மலைச்சிகரங்கள், தெளிந்த நீரோடைகள் — இப்படி எங்கும், எதிலும் எழிலும் இன்பமும் காணவிழையும் இதயங் கொண்டாள் அவள். இயற்கையின் படைப்புகளிலே, எதைக்காணினும், ஒரு முழுமை நிலையைக் கண்டு அது போலத்தான் மனித இனமும் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும், வாழ்வு நடத்த வேண்டும் என்ற ஒரு உறுதி கொண்டாள்.

இந்த எண்ணத்தின் விளைவுஎன்ன தெரியுமா? அன்றாட வாழ்வில் தான் காணும் பழகும் எவரிடமும் மனோன்மணிக்கு ஒரு குறை தென்பட்டது. எனவே யாரிடமும் அதிகம் பழகுவதையே குறைத்துக் கொண்டாள். அவள் படித்துக்கொண்டிருந்த கல்லூரியில் மனோன்மணி என்றால் எல்லோருக்கும் தனிமதிப்பு, மரியாதை எல்லாம் ஏற்பட்டது. ஆனால் மனோன்மணிக்கோ எவரிடமும் பற்று ஏற்படவில்லை. காரணம் என்ன தெரியுமா? ஏற்கனவே கூறியது போல் குறையேதும் இல்லாத மனிதர்களைக்காண முடியவில்லை அவளால். ரோஜா மலரில் முள்ளைப் படைத்தானே பரமன். மனிதன் மாத்திரம் இதற்கொரு விதிவிலக்காக முடியுமா?

நாட்கள் ... மாதங்கள் ... வருடங்கள் உருண்டோடின. கல்லூரியில் பி. ஏ. படிப்பு முடிவடையும் தருணம். அச்சமயத்தில்தான் அந்த ஊருக்கு புதிதாக மாற்றலாகி வந்த அதிகாரி ஒருவர் அவள் வீட்டருகே வாடகைக்கொரு வீடு அமர்த்திக்கொண்டார். அவர் பெண்மங்கை. விசித்திரமானவள். வாழ்க்கையில் எதிலும் அதிக ஈடுபாடில்லாமல், எதையும் எளிதாக பாவித்துக்கொண்டு வாழ்வதை விரும்பியவள். இந்த எண்ணத்தின் பலனாக பள்ளிப்படிப்பே அதிகம் பெறவில்லை அவள். கல்லூரியிருக்கும் திசைநோக்கி நடந்தேயறியாள் அவள். கிழக்கும் மேற்கும் ஒன்று சேர முடியுமா? முடியாது என்றுதான் திட்டவட்டமாகக் கூறுவர். ஆனால் பாருங்கள் மங்கையும், மனோன்மணியும் இணைபிரியா தோழிகளாயினர். குணத்தில்,வாழ்க்கையை நோக்கும் கண்ணோட்டத்தில், இருவரும் மாறுபட்ட நிலையிலிருந்தனர். எனினும் நெருங்கிய நட்பென்னும் தளையினால் பிணைக்கப்பட்டனர். ஒருத்தி கருத்தினை மற்றவள் ஒப்புக்கொள்ளவேண்டும் என வதாடுவர். தோல்வியுமடைவர். ஆனால் அவர்கள் நட்பு நாளுக்குநாள் நல்ல முறையில் வளர்ந்தது.

ஒருநாள் மனோன்மணிக்கு பெரிய அதிர்ச்சி தரும்படியான அதிசயம் ஒன்று நடந்தது. ஆமாம். மங்கையும் அவளும் அவர்கள் ஊருக்கருகே உள்ள மலைமீதேறி நின்றுகொண்டிருந்தனர். அங்கே ஏனோ அன்று விண் முகில்கள் அம்மலைச் சிகரத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

மனோன்மணிக்கு ஒரு ஐயம் தோன்றிற்று! வானத்து முகில் இம்மலைச் சிகரத்தை தீண்டிற்றே...ஏன்? உடனே வெகு வேகமாக அவள் கற்பனை எதை எதையோ எண்ணியது. திடீரெனத் தோன்றியது ஒரு எண்ணம்....ஆம்... வெறும் மண் மீதினின்று உயர்ந்து, வானோக்கிச் சென்றிருக்கிறது இம் மலை. வானத்தை நோக்கிய வண்ணம் இருக்கும் இச்சிகரத்தைப் பாராட்டுவதற்காக வான் மடந்தை தன் வெண் முகிலென்னும் ஆடை ஒன்றினைப் பரிசாகப் போர்த்தியிருக்கிறது இம் மலைச் சிகரத்திற்கு ...ஆம் ... உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல். மனிதன், சிந்தனையில், சொல்லில், செயலில், நாளுக்கு நாள் மேம்பட்ட உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டும்.

பூரணத்துவ நிலை பெற வேண்டும்... இதுதான் மனிதனின் இடைவிடா முயற்சியாக இருக்க வேண்டும் ... என்று நினைத்துக் கொண்டிருந்தவள் தன்னையறியாமல் பேசிக்கொண்டே இருந்தவள் ... கைதட்டலைக் கேட்டுத் திடுக்கிட்டாள். ஒலி வந்த திசை நோக்கினாள் ... அருகே நின்ற நங்கை, மங்கை எங்கே மறைந்து விட்டாள்? மணவாளன் ... கல்லூரி மாணவன் இங்கே எங்கே எப்படி வந்தான்? என்று யோசித்தாள்.

ஐ ஆம் சாரி...உங்கள் இனிமையான ஏகாந்தத்தைக் கலைத்து விட்டேன். அதோ பாருங்கள் ... வானத்திலிருந்து மேகம். மண் மீது தோன்றிய மலை ...இவை இரண்டும் ஒன்று சேர்ந்திருக்கும் இயற்கை அழகுக் காட்சியை ... என்று அவன் முடிப்பதற்குள் உங்கள் வருணனைகள் எனக்குத்தேவையில்லை. நான் இங்கே வந்தது...என்று மனோன்மணி சொல்வதற்குள் மணவாளன் எனக்குத் தெரியாது...ஏதோ பொழுது போகவில்லை. இந்த இயற்கைக் காட்சியைக் கண்டு ரசிக்கலாம் என்று இங்கே வந்தால் நீங்களும்...என்று பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டான்.

மணவாளன் நல்ல பண்புள்ளவன் அறிவுள்ளவன். அவனிடம் தனிக் கவர்ச்சி ஒன்றினைக் கண்டாள் அவள். எனினும் ஏதோ ஒரு குறை அவனிட[ம்] இருப்பதாக ஒரு பிரமை அவளுக்கு[.] உண்மையில் அவனிடம் குறை யொன்று ... இருக்கத்தான் செய்தது. அது...அவன் அளவுக்கு மீறிய ச[ங்]கோஜம் .... படைத்தவன். அதுமட்டு மல்ல எதற்கும் தத்துவம் பேசும் போக்குடையவன். அப்படிப் பார்த்தால் எதற்கும், எப்போதும் கற்பனைக்குதிரையை மனதில் பறக்கவிட்டு வானத்தில் பறப்பவளாயிற்றே மனோன்மணி....இதுவும், பெருங்குறைதானே. ஆனால் பேதை அவள் எங்கே இந்த தன் குறையை உணர்ந்தாள்?

மனிதன் மனம் அரங்கம் போன்றதென்பார்கள். ஆங்கே என்னென்ன அற்புதங்கள், கருவூலங்கள் இருக்கின்றனவோ யாருக்கும் தெரியாது. மணவாளன் மனம் மனோன்மணியை நாடியது. மனோன்மணிக்கும், அவன் பால் ஏதோ இனந்தெரியாத கவர்ச்சிதான். ஆனால் அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை அவள். எப்படியோ அவள் தோழி மங்கை அறிந்தாள் இதை.

தணிகாசலத்திற்கு தந்தைக்குரிய கவலை ஏற்பட்டது. தன் அருமை மகளுக்கேற்ற மணாளன் வேண்டுமே, சிறப்பாக அவள் திருமண வாழ்வு அமைய வேண்டுமே என்று அவருக்கு அல்லும் பகலும் கவலை ஏற்பட்டு விட்டது. எனவே மங்கையை அழைத்தார். அவளிடம் மனோன்மணியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், மணவாளனைப் பற்றியும், அவன் காதலைப் பற்றியும் அறிந்தபோது அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. காரணம் அவன் அழகன், நல்ல அறிஞன், பண்பாளன். ஆனால் அவர் அவனிடம் கண்ட ஒரே குறை அவன் செல்வந்தனல்ல. தவிர அவனது பெற்றோர்கள் பேணிக்காக்க வேண்டிய குடும்பம் பெரியது. மணவாளனின் பண்பைப் பார்த்தபோது குறையென்று அவர் கருதியதெல்லாங்கூட மறைந்துபோயின அவர் மனதில். எனவே எப்படியும் செல்வி மனோன்மணியை, மனோன்மணி மணவாளன் ஆக்கிவிட வேண்டியதுதான் எனத் தீர்மானித்தார். மங்கை மிக்க மகிழ்ச்சியடைந்தாள் அவரது முடிவு கேட்டு. ஆனால் மனோன்மணியோ சம்மதிக்கவில்லை.

காரணம், அதுதான் தணிகாசலத்திற்குப் புரியாத பெரும்புதிராக இருந்தது. மணவாளனிடம் மனோன்மணி கண்ட குறை அவருக்குப் புரியவில்லை. ஏன் எவருக்கும் புரியாது. மனோன்மணிதான் அதைப் புரிந்து

கொள்ளமுடியும். தவிரமணவாளனின் பெரிய குடும்பத்தில் தன்னால் ஒரு கைதிபோல் வாழ முடியாது என்று சொல்லி, தான் திருமணமே செய்து கொள்ளப்போவதில்லை என மறுத்து விட்டாள். மங்கையும், தணிகாசலமும் செய்த திட்டத்தின்படி, மணவாளன் மனோன்மணியைச் சந்தித்துப் பேசலாமென அவன் ஊரருகே உள்ள மலைக்குச் சென்றபோது அவன் சென்று பேசியதின் விளைவு பூஜ்யம்.

திடீரென மங்கைக்கு நல்ல வரன் கிடைத்து அவள் திருமணம் நடைபெற்றது. மங்கை தன்புக்ககம் சென்றாள். மீண்டும் ஒரு . புரியாதபுதிர். மனோன்மணி தந்தையின் தீர்மானத்திற்குச் சம்மதம் தெரிவித்தாள். தன் தோழி திருமணம் புரிந்துகொண்டு இன்ப வாழ்வு வாழும்போது, தான் மட்டும் ஏன் மணம்செய்து கொண்டு மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்கலாகாது? என்ற ஒரு எண்ணம் தோன்றிற்று அவளுக்கு.

வெகு விரைவில் மனோன்மணி மணவாளன் திருமணம் மிகச்சிறப்பாக நடைபெறலாயிற்று. புதுமணத் தம்பதிகள் மகிழ்வோடிருக்க அவர்களை கன்னியாகுமரி போன்ற புத்தம் புது இடங்களுக்குச் சென்றுவர ஏற்பாடுகள் செய்தார் தணிகாசலம். நாட்டின் நகரங்கள் பல சென்று கண்டு ஊர் திரும்பினர் தம்பதியர்... அவர்கள் குடும்ப வாழ்வு தொடங்கியது.

ஆனால் மனோன்மணி தன் புக்ககத்தில் கண்டதெல்லாம் குறை — பெரிய சம்சாரம் மாமனார் மாமியாரது செல்வாக்கு முதலியன. அங்கே தான் விரும்பியபடிதான் எதுவும் நடக்க வேண்டும் என அவள் ஆணையிட முடியாதெனக் கண்டு கொண்டாள். அவள் கணவன் அன்புமிக்க கணவன் தான். ஆனால் பெற்றோருக்குக் கட்டுப்பட்ட பொறுப்பான மகன். அதுவுமல்லாது அவன் விரும்பியபடி அவள் தந்தை வீடு அதுதான். தணிகாசலத்தின் வீட்டில் வந்து வாழ மறுத்து விட்டானவன். தன் வீட்டில் எத்தனை துன்பங்களிருப்பினும் தான் தன் மானத்தோடு தன் இல்லத்தில் தன் தாய் தந்தையரது மேற்பார்வையில் தான் வாழ்வேன் என உறுதியுடன் கூறிவிட்டான் அவன்.

எனவே சிணுங்கொண்டு பிறந்தகத்திற்கு வந்துவிட்டாள் மனோன்மணி. பெற்ற தந்தையிடம் எதையும் கூற மறுத்துவிட்டாள். நுண்மதி படைத்த தணிகாசலம் மகளுக்குக் கூறிய அறிவுரைகள் பலனற்றுப் போயின. புக்கம் செல்ல மறுத்து விட்டாள். பெற்ற பாசம் அவரை எதுவும் பேச விடாமல் செய்துவிட்டது. நாட்கள் கடந்தன. மனோன்மணி- அவளும் ஒரு பெண்ணல்லவா. அவள் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த வனிதை... சிறிது சிறிதாக விழித்துக்கொள்ளத் தொடங்கினாள். கணவனுடன் சிறிது காலம் நடத்திய இன்ப மணவாழ்வு எல்லாம் அவள் மனத்திரையில் நிழற்காட்சிகள் போலத் தோன்றின. அவளறியாமல் அவள் அன்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள் ஆகாயத்தை ஆம் அங்கே தோன்றிய மூன்றாம் பிறையை.

மனோ... இதோ என்னைப்பார் எனக்கு எல்லா செல்வங்களும் இருக்கின்றன. அவற்றால் என்ன பயன்? கணவனை இழந்து இருக்கிறேனே ... உன் கணவர்... அவரிடம் நீ என்ன குறையைக் கண்டுவிட்டாய்?

எந்த நிலையிலும் தன்மானத்தோடு தன் முயற்சியால்தான் வாழ்வேன் பிறர் உதவி தேவையில்லை என்று கூறி உன் பிறந்தகம் வர மறுத்தாரே இதைவிட உயர்ந்த பண்பு வேறு என்ன நீ எதிர்பார்க்கிறாய், உன் கணவனிடம். மனோ... நான் சொல்கிறேன் என்று வருந்தாதே... நீ வானத்தில் கண்டு மகிழும் பிறைமதி முழுமதி அல்லவே. ஆனால் அதில் அழகிருக்கிறதல்லவா? வாழ்க்கையிலும்எல்லாம் முழுமை பெற்றதுஎன்றுஎதுவும் இல்லை குறையும், நிறையும் ஒருங்கு சேர்ந்து இருப்பதே உலக...

மங்கை சொல்லி முடிப்பதற்குள் மனோன்மணியின் கண்கள் நீர் உகுத்தன. மங்கை புரிந்துகொண்டேன். இத்தனை நாளும், நான் தெரிந்து கொள்ளாத பேருண்மையை இந்த வானத்து இந்துமதி எனக்கு அறிவுறுத்தி விட்டது. இதோ....இப்போது அவர் வீடு...இல்லை... இல்லை என் வீட்டிற்குச் செல்கிறேன் என்று புறப்பட்டுவிட்டாள் மனோன்மணி.

திருச்சி வானொலி நிலையத்தார் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.

---

## வல்லை, வல்லை, பலமாயம்?

—அருட்கவி. அரங்க. சீனிவாசன்

அருவோ, உருவோ நின்வடிவம்?
அடியேன் அறியேன். ஆனாலும்,
திருவோ ஒன்றும் குறைவில்லாத்
தேசோ மயமாய்த் திகழ்கின்றாய்!
குருவோ, தாயோ, தந்தையோ...
கோ வே!-- நீதான்? ஆனாலும்,
பரிவோ ஒன்றும் குறைவில்லை.
பகலும் இரவும் காக்கின்றாய்!

கருப்போ, சிவப்போ உன்வண்ணம்?
கண்டார் யாரே? ஆனாலும்,
விருப்போ, வெறுப்போ இல்லாமல்,
வெய்யோன்போலே இருள்கெடுப்பாய்!
பொருப்போ, கடலோ நின்இருக்கை?
புரிய வில்லை. ஆனாலும்,
இருப்போ என்நெஞ் சிடங்கொண்டாய்!
இல்லேன் இதற்கோர் கைம்மாறே!

அழிப்போ, காப்போ உன்செய்கை?
அறிந்தார் யாரே? ஆனாலும்,
பழிப்போ அகல இங்கெவ்வும்
பாரித்(து)இயங்க வைக்கின்றாய்!
விழிப்போ, துயிலோ உன்நிலைதான்?
விடைநான் அறியேன். ஆனாலும்,
செழிப்போ, தேய்வோ நீ அறியாத்
திறமோ இல்லை. பெருமானே!

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.